பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**29 08 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு உதவி அளித்த இந்தியாவுக்கு, நேபாள அதிபர் நன்றி தெரிவித்துள்ளார்.

**2.** பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை **11** மணிக்கு ஒலிபரப்பாகிறது.

**3.** நுண்ணீர் பாசனம் மூலம் **115** லட்சம் ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**4.** முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

**5.** **Pontianak** சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ginpaul Sonna** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள்-

<<<<<<<>>>>>>

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு உதவி அளித்ததற்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு நன்றி தெரிவிப்பதாக நேபாள அதிபர் திரு **Ramachandra Paudel** தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, நேபாள அதிபர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நேபாளத்தில் உயிரிழந்த இந்தியர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

நேபாளத்திற்கு உதவி அளித்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாக நேபாள நிதியமைச்சர் திரு **Swarnim Wagle** தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு இந்தியா இதுவரை 57 புள்ளி ஆறு டன் நிவாரணப் பொருட்களை அனுப்பிவைத்ததாக கூறியுள்ளார்.

மேலும், நேபாளத்தின் வேண்டுகோளை ஏற்று, சிறப்பு மருத்துவம் மற்றும் நிபுணர் குழுவை இந்தியா அங்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அடையாளம் தெரியாத **229** சடலங்களின் இறுதிச்சடங்கு மேற்கொள்ள நேபாள அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தெற்கு **Chitwan** மாவட்டம் **Koshi** ஆற்றிலிருந்து மீட்கப்பட்ட இந்த சடலங்களை கண்டறிய முடியாததால், புதைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சடலங்கள் அழுகுவதால் நோய் பரவும் அபாயம் இருப்பதையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை **626** பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மருத்துவமனைகளில் இந்த சடலங்களை வைக்க போதிய இடம் இல்லாததால், உடனடியாக புதைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சடலங்களின் டிஎன்ஏ மாதிரிகள் சேமித்து வைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

நேபாளத்தில் சிக்கிய **88** இந்தியர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், **287** இந்தியர்கள் நேபாளத்தில் காணாமல் போனதாக கூறியுள்ளார்.

மேலும், இந்திய வம்சாவளியை சேர்ந்த **128** பேரும் நேபாளத்தில் காணாமல் போனதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**Rasuwa** நீர்மின் நிலையத்தில் இருந்து நான்கு இந்தியர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சீனாவிலிருந்து **120** இந்தியர்கள் பத்திரமாக நேபாளம் சென்றடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து ஆறு தடயவியல் நிபுணர்கள் குழு சடலங்களின் டிஎன்ஏ சோதனை செய்வதற்காக நேபாளம் சென்றுள்ளதாக திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை **11** மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<<<>>>>>>>

நுண்ணீர் பாசனம் மூலம் 115 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2006 ஜனவரி மாதம் தொடங்கப்பட்ட பிரதமரின் நுண்ணீர் பாசனத் திட்டம் மூலம், தண்ணீர் முழு அளவில் பாசனத்திற்காக பயன்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ், ஐந்து ஹெக்டேர் வரை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு 55 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசன வசதி அமைக்கப்படுகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் 8 ஆயிரத்து 123 கோடி ரூபாய் நுண்ணீர் பாசன வசதி அமைப்பதற்காக மத்திய அரசு வழங்கியுள்ளது.

நீர் மேலாண்மை மூலம் வேளாண் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க இது வழிவகை செய்யும்.

<<<<<<<<>>>>>>>

குடியரசுத் துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், இரண்டு நாள் பயணமாக நாளை கேரளம் செல்கிறார்.

ஆலப்புழாவில் தனியார் செய்தி நிறுவனத்தின் 115-ஆவது ஆண்டு விழாவில் அவர் உரையாற்ற உள்ளார்.

பின்னர் பத்தனம்திட்டா மாவட்டத்தில் உலக பிரசித்தி பெற்ற **Aranmula** படகு போட்டியை அவர் தொடங்கிவைக்கிறார்.

பம்பை ஆற்றில் நடைபெறும் இந்த திருவிழாவில் 51 படகுகள் போட்டியிட உள்ளன.

பின்னர், தலைநகர் திருவனந்தபுரத்தில் நடைபெறும் அரசு சார்பிலான ஓணம் சுற்றுலா வார விழாவை அவர் தொடங்கிவைக்கிறார்.

நாளை மறுநாள் லட்சத்தீவு செல்லும் அவர், அங்கு அகத்தியில் நடைபெறும் மீன்வளத்துறை நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

<<<<<<<<>>>>>>>

முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சிகாகோவில் முதலீட்டாளர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் முதலீட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாக தெரிவித்தார்.

நிலையான பொருளாதார வளர்ச்சி, திறன் மேம்பாடு, உலகத்தரமான கட்டமைப்பு வசதி, தொழில்நுட்ப முன்னேற்றம் உள்ளிட்டவை மூலம் உலகளாவிய முதலீட்டாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருவதாக தெரிவித்தார்.

நாட்டின் டிஜிட்டல் பொது கட்டமைப்பு மேம்பட்டு வருவதாக கூறிய அவர், மக்கள் அதிக அளவில் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை முறையை பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

சுயசார்பு இந்தியா போன்ற திட்டங்கள் மூலம், ட்ரோன் உற்பத்தி உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

உலகளாவிய நிறுவனங்கள் இந்தியாவுடன் ஒருங்கிணைந்து செயல்பட வரவேற்பதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் இயக்கத்தின்கீழ், நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோன்மண்ட் வாரியம் சார்பில், மரக்கன்றுகள் நடும் பணி தொடங்கியது.

இதன்மூலம், சின்னவண்டிச்சோலை பகுதியில் முதல்கட்டமாக ஆயிரம் மரக்கன்றுகளை நடும் பணி தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — சரவணன் - 46 SEc.)*

<<<<<<<<>>>>>>

பஞ்சாபில் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

அகவிலைப்படி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி லட்சக்கணக்கான ஊழியர்கள் விடுப்பு எடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்றைய தினம் விடுப்பில் சென்ற அனைத்து ஊழியர்கள் மீது நிர்வாக நடவடிக்கை எடுக்க அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

இலங்கைக்கு **21** மில்லியன் இலங்கை ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு இருநாடுகளுக்கு இடையேயான கூட்டமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற கூட்டத்தில், கல்வி, கலாச்சாரம், வேளாண், அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட **13** திட்டங்களை செயல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், இந்தியாவுக்கான இலங்கை தூதர் **Mahishini** இலங்கைக்கான இந்திய தூதர் **Santosh Jha,** வாரிய உறுப்பினர்கள் திரு பிரசாத், திரு மோகன்குமார், திரு அசோக் மாலிக் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

இலங்கையில் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

<<<<<<<<>>>>>>

**Hormuz** நீரிணை தங்களது முழு கட்டுப்பாட்டில் இருப்பதாக ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையை மறுத்துள்ள ஈரான், அப்பகுதி வழியாக செல்லும் அனைத்து கப்பல்களும் ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ளதாக தெரிவித்துள்ளது.

ஈரானின் அனுமதி இல்லாமல், **Hormuz** நீரிணை வழியாக எந்த வர்த்தக கப்பல்களும் செல்ல முடியாது என்றும் ஈரான் கூறியுள்ளது.

இதனிடையே, வளைகுடா பகுதியில் செல்வதற்கு அமெரிக்கா குடிமக்களுக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளை அந்நாட்டு அரசு நீக்கியுள்ளது.

குவைத், பக்ரைன், கத்தார் நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்களுக்கு செல்ல தூதரக அதிகாரிகளின் குடும்பங்களுக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Pontianak** சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ginpaul Sonna** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **21-19, 21-10** என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Chico Aura**-ஐ வென்றார்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் **Tanvi Patri**-யும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

---------------

செர்பியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prarthana Thombare** - பல்கேரியாவின் **Karatancheva** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-2, 6-1** என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Mary Lewis - Brandy Walker** இணையை வென்றது.

**<<<<<<<<<END>>>>>>>**